International Journal of Advanced Multidisciplinary Research (IJAMR)
ISSN: 2393-8870
www.ijarm.com

ஆராய்ச்சிக் கட்டுரை

# சமண சமய நெகிழ்வும் வைணவச் சார்பும்

இரா.ஏழுமலை
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
இராஜா நந்திவர்மன் கல்லூரி, தெள்ளார்.

## ஆய்வுச் சுருக்கம்

வைதீக சமயத்தின் எழுச்சியால் பின்னுக்குத் தள்ளப்பட்ட சமண, பௌத்த சமயத்தினர் தங்களை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டி, பல்வேறு சமய நெகிழ்வுகளுக்கு ஆளாயினர். இந்நிலையில், காலங்காலமாகத் தாங்கள் கைக்கொண்டிருந்த பல்வேறு கொள்கைகளில் சமரசத்திற்கு ஆளாயினர். அவ்வகையில், கடவுள் இல்லை எனக் கூறிய சமணம், பின்னாளில் உருவ வழிபாட்டிற்குரியதாக மாற்றம் பெற்றது. அம்மாற்றம் வைணவச் சார்புடையதாக மாறின என்பது ஆய்வுவழி அறியமுடிகிறது.

முக்கியச் சொற்கள்:
வைணவம்x சமணம்,
கண்ணன் x சீவகன்,
இலட்சுமி x பத்மாவதி

## இல்லற தர்மம்.

சமணம் முக்தி பெறுவதற்கு வலியுறுத்திய ஐந்து வகையான அணுவிரதங்கள் பின்னாளில் இல்லற தர்மத்துக்கு ஏற்றவாறு மாற்றம் அடைந்தன. அகிம்சை, வாய்மை, களவு செய்யாமை, பிரம்மச்சரியம், அவா அறுத்தல் ஆகியவற்றைச் சமணம் வலியுறுத்தியது. இவற்றில் பிரம்மச்சரியம் என்பது இல்லறத்தார் கடமைகளின்வழி, தன் மனைவியைத் தவிரப் பிறர் மனைவியை நோக்காமை என்று மாற்றம் அடைந்தது. அவா அறுத்தல் என்பது தன் குடும்பத்துக்கும் தனக்கும் தேவையான பொருளைத் தவிர மிகு பொருள்களை விரும்பாமை என்று மாற்றம் அடைந்தது. இவ்வாறு ஐந்து வகை அணுவிரதங்கள் துறவிகளுக்குத் தனியாகவும் இல்லறத்தார்க்குத் தனியாகவும் பாகுபாடு அடைந்தன.

தொடக்ககாலச் சமணம் நிலத்தை உழுவதன் விளைவால் நிலத்தில் வாழும் உயிர்கள் இறப்பதற்கு வாய்ப்பாகும். எனக் கூறி உழவை வெறுத்தது.

“இல்லறத்தில் உழவு, வாணிபம், போர்ப்பயிற்சி, கலை முதலான தொழில்களில் ஈடுபடுவதால் இவை அனைத்துமே துன்பத்திற்குக் காரணமாக அமைகின்றன என்பதால் இல்லறம் முக்திக்குக் காரணமாக அமையாது என்றனர்.” (ஆத்மானு சாசனம், ப.41)

ஆனால் தமிழர்கள் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டவர்கள் என்பதாலும், சமண சமயத்தை மக்கள் கைக்கொள்ள வேண்டும் என்பதாலும், இல்லறத்தார் இத்தகைய தொழிலை மேற்கொள்ளலாம் எனக் கொள்கைகளை நெகிழ்வுபடுத்தியுள்ளனர்.

இவ்வாறு வைதீக சமயத்தார் போற்றி வளர்த்த பலவற்றையும் பிற்காலச் சமணர்கள் பின்பற்றத் தொடங்கினர். இவர்கள் மெல்ல மெல்லக் கடவுள் கருத்தாக்கம், கோயில் பண்பாடு என்னும் வைதீக மரபுக் கூறுகளைத் தங்களுக்குள் உட்செரித்துக் கொண்டனர் என்றாலும் அனைத்துச் சமண முனிவர்களும் ஒரே நிலையில் இயங்கவில்லை. சமணர்களின் அடிப்படையான மூலக் கொள்கைகளைப் பின்பற்றி ஒழுகிய திகம்பரர் போன்றவர்கள் தொடர்ந்து வாழ்ந்து வந்தனர். இல்லற தர்மத்தில் ஈடுபட்ட சுவேதாம்பரர் என்னும் பிரிவினர் மாற்றத்திற்கு உள்ளாயினர். இந்நிலையில் நாட்டின் அனைத்துத் தரப்பிலும் செல்வாக்குப் பெற்ற வைதீக சமயத்தார் சமணர்களை அடியோடு அழித்தொழிக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டனர். இலக்கிய நிலையில் எதிர்ப்பிலக்கியங்கள் எழுதுதல், இலக்கியங்களில் சமயத் தருக்கங்களை மேற்கொண்டு வெல்லுதல், அரச சபைகளில் வாதுக்கு அழைத்துத் தோற்கடித்தல் என்னும் நிலை, நேரடியாகச் சமணர்களை அடித்துத் துன்புறுத்துதல், சிறையிலிடல், நாட்டை விட்டு விரட்டி அடித்தல், கொலை செய்தல் என்னும் நடவடிக்கைகளில் வைதீக சமயத்தைச் சார்ந்தவர்கள் ஈடுபடத் தொடங்கினர். இதன்விளைவால் சமணர்கள் பலர் நாட்டைவிட்டு வெளியேறும் நிலை உருவானது. சிலர் மலைக் குகைகளில் பதுங்கினர். வைதீக சமயத்தில், குறிப்பாகச் சைவ சமயத்தைச் சேர்ந்தவர்கள் இத்தகைய சமண சமய அழித்தொழிப்புச் செயற்பாடுகளில் நேரடியாகப் பங்கேற்றார்கள். இதற்குப் பயந்த சமணர்களில் ஒரு பிரிவினர் சைவ சமயத்துக்கு மதமாற்றம் அடைந்தார்கள் என்னும் கருத்தும் உள்ளது. தருமசேனர் என்னும் பெயரில் சமணராக இருந்தவர் சைவ சமயம் சேர்ந்து திருநாவுக்கரசராக மாறினார் என்று கூறப்படும் செய்திகள் ஒருவரைப் பற்றிய வரலாற்றோடு மட்டும் தொடர்புடையவை அல்ல. அது தமிழக சமயங்களின் போராட்ட வரலாற்றின் ஒரு குறியீடு மட்டுமே ஆகும். இன்றும் கூட ‘நீற்றுப்பூச்சு நாயனார்’ என்று அழைக்கப்படும், திருநீறு அணிந்த சமணப் பிரிவினர் கலசப்பாக்கம் என்னும் ஊரில் வாழ்ந்து வருகின்றனர் என்னும் கருத்தும் கவனிக்கத்தக்கதாகும்.

## வைணவமும் சமணமும்

சமணர்களை அழித்தொழிக்கும் முயற்சியில் வைணவ சமயத்தார் பெரிதும் ஈடுபடவில்லை என்று வரலாறுகள் தெரிவிக்கின்றன. தங்களை அழித்தொழிக்கும் சைவ சமயத்தாரிடம் இருந்து தங்களைக் காத்துக் கொள்ளச் சமணர்களில் பெரும்பான்மையோர் வைணவ சமய மரபுகளை உட்செறித்துக்கொண்டனர் என்றும் கூறப்படுகிறது. அவ்வகையில் வைணவ சமயக் கூறுகள் பலவும் சமண சமயத்தில் கலந்தன.

வைணவத்தின் பலராமர் வழிபாடு சமணத்தில் கலந்ததை இதற்கு ஒரு முதன்மைச் சான்றாகக் கொள்ளலாம்.

“மாபாரத காலத்திலேயே, அதாவது கண்ணபிரானுடைய காலத்திலேயே சமணர் தமிழ்நாட்டிற்கு வந்ததாகத் தெரிகிறது. 22வது தீர்த்தங்கரராகிய நேமிநாதசுவாமி கண்ணபிரானுடைய நெருங்கிய உறவினர் என்றும் கண்ணபிரான் எதிர்காலத்தில் 24வது தீர்த்தங்கரராகப் பிறந்து சமண சமயத்தை நிலைநாட்டப் போகிறார் என்றும் சமண நூல்கள் கூறுகின்றன” (மயிலை.சீனி.வேங்கடசாமி,2003:ப.76)

என்னும் மயிலை சீனி.வேங்கடசாமியின் கருத்து வைணவ, சமண இணைப்பின் ஒரு கூறை வெளிப்படுத்துவதாக உள்ளது. சமண சமயத்தின் முழுமுதற்பெரும் காப்பியமான சீவக சிந்தாமணியில் காப்பியத் தலைவனாகிய சீவகன், பல இடங்களில் வைணவக் கடவுளாகிய திருமாலோடு ஒப்பிடப்படுகிறான் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## கண்ணன் - சீவகன் ஒப்புமை

| வ. எண் | கண்ணன் | சீவகன் |
|---|---|---|
| 1. | சிறையில் பிறந்து, ஆயர்பாடியில் வளர்ந்தான். | சுடுகாட்டில் பிறந்து, கந்துக்கடனிடம் வளர்ந்தான். |
| 2. | வசுதேவர்-தேவகி இவர்களின் மகனாகப் பிறந்து, நந்தகோபன்-யசோதை தம்பதியரின் வளர்ப்பு மகன் ஆகிறான். | சச்சந்தன்-விசையை மகனாகப் பிறந்து, கந்துக்கடன் - சுநந்தை எனும் வணிகத் தம்பதியரின் வளர்ப்பு மகன் ஆகிறான். |
| 3. | குழலிசைப்பதில் வல்லவன். | யாழிசைப்பதில் வல்லவன். |
| 4. | கோபியர்கள் காமுறும் இளைஞனாக இருந்தவன். | பெண்கள் விரும்பும் எழில் கொண்டவனாக இருந்தவன். |
| 5. | எட்டுப் பெண்களை மணந்தவன். | எட்டுப் பெண்களை மணந்தவன். |
| 6. | தன்னேரில்லாத் தலைவனாக விளங்கினான். | தன்னேரில்லாத் தலைவனாக விளங்கினான். |

கண்ணன் பிறந்தது ஓரிடம் வளர்ந்தது வேறோர் இடம் என்பது போல, சீவகன் சுடுகாட்டில் பிறந்து வேறோர் இடத்தில் வளர்கிறான். கண்ணனின் பிறப்பு வளர்ப்பைப் போலவே சீவகன் சச்சந்தன் - விசையை மகனாகப் பிறந்து, கந்துக்கடன் - சுநந்தை எனும் வணிகத் தம்பதியரின் வளர்ப்பு மகன் ஆகிறான்.

கண்ணன் குழலிசைப்பதில் சிறந்தவனாக விளங்க, சீவகன் யாழிசைப்பதில் வல்லவனாக விளங்குகிறான். கண்ணன் கோபியர்கள் காமுறும் இளைஞனாக இருக்க, சீவகன் எட்டுப் பெண்களை மணப்பவன் ஆகிறான். கண்ணனின் மனைவியராக எட்டு மனைவியரை இலக்கியங்கள் காட்டுகின்றன. அதைப் போலவே சீவகனுக்கும் எட்டு மனைவியர் என இலக்கியங்கள் போற்றுகின்றன. இவ்வாறு சீவக சிந்தாமணியில் சீவகன் - கண்ணன் இணைவுகள் காணக் கிடைக்கின்றன.

மேலும், கோவிந்தையார் இலம்பகத்தில் ஆயர் தலைவன் நந்தகோபன் வேடர் கூட்டத்தை வெற்றி கொண்டு, பெரிய பசுக்கூட்டத்தை மீட்டு வரும் வீரருக்கு என் மகளைப் பரிசாகத் தருவேன் என முரசறைந்தான். இந்நிலையில் பசுக்கூட்டத்தை மீட்க சீவகன் புறப்பட்டான். திருமாலின் வாகனமாகிய கருடனின் சிறகுகளின் ஒலியால் பாம்பு அஞ்சி ஒடுங்கிக் கிடப்பதுபோல் சீவகனின் தேர் முழக்கத்தால் வேடவர்கள் மன எழுச்சி குன்றிச் செயல் இழந்து தோற்றனர் என சீவகனையும் திருமாலையும் இணைத்துக் கூறியிருப்பது நோக்கத்தக்கது. மற்றொரு பாடலில் இராகு என்னும் கோளின் வாயிலிருந்து நிலவைத் திருமால் விடுவித்ததைப் போல் பசுக்கூட்டத்தை சீவகன் மீட்டு வந்தான் என ஒப்பிட்டுக் காட்டுவர்.

“வாள்வாயும் இன்றி வடிவெங்கணை வாயுமின்றிக்
கோள் வாய் மதியம் நெடியான் விடுத்த ஆங்கு மைந்தன்
தோள் வாய்ச் சிலையின் ஒலியால் தொறுமீட்டு மீள்வான்
நாள்வாய் நிறைந்த நகைவெண்மதி செல்வது ஒத்தான்” (சீவக.பா.454)

காந்தருவதத்தை இலம்பகத்தில் சீவகனின் வெற்றிச் சிறப்பைப் போற்றும் தேவர், பாரதப் போரில் கண்ணபிரானால் முழங்கப்பட்ட வலம்புரிச் சங்கிற்கு இணையான ஒரு சங்கை வாயில் வைத்து சீவகன் முழங்கினான்; திருமால் அன்று மந்திர மலையை மத்தாகவும் வாசுகி எனும் பாம்பினைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்தபோது கலங்கிய கடல் போல மன்னர் கலங்கினர் எனச் சீவகனின் போர்த்திறனைக் கண்ணனோடு ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

இலக்கிய நிலையில் மட்டுமல்லாமல் சமூக நிலையிலும் வழிபாட்டிலும் சமணர்கள் வைணவ சமயத்தாரைப் பின்பற்றி உள்ளனர் என்பது தெரிகிறது. குறிப்பாகத் திருமாலின் மனைவியான பத்மாவதித் தாயார் சமணப் பெண் தெய்வமாகவும் வணங்கப்படுகிறார். திருமாலின் ஆயுதமான சங்கும் சக்கரமும் சமணரின் வழிபாட்டுப் பொருள்களாக உள்ளன.

சமணர்களின் திருத்தலங்கள் வைணவத் திருத்தலங்களுக்கு ஒப்பாகப் பலிபீடம், மானஸ்தம்பம், மூலவர் என அமைக்கப்பட்டுள்ளன. கொல்லாமையை வலியுறுத்திய சமணம் தங்கள் திருத்தலங்களில் பலிபீடம் அமைத்திருப்பதைக் காணும்போது, வைணவச் சார்பை உணரமுடிகிறது. மேலும், இராமனின் வரலாற்றைக் கூறும் இராமாயணம் சமணத்திலும் உள்ளது. அது ஜைன இராமாயணம் என அழைக்கப்படுகிறது.

“வந்தவாசியின் தென்மேற்கே சேத்பட் சாலையில் உட்புறமாக அமைந்தது பொன்னூர் கிராமம். இங்குச் சிறு குன்று போல் அமைந்துள்ள மேடான பெரும் பாறைகள் மீது கட்டப்பட்டுள்ளது சமணத் திருத்தலம். இதன் மூலவர் கனககிரி ஆழ்வார் என அழைக்கப்படுகிறார்.” (காசிநாதன்,2005:ப.25)

மேலும், இக்கருத்தை வைணவ புராணங்களும் எடுத்தியம்புகதின்றன. திருமாலின் பத்து அவதாரங்களில் ஒன்றான வாமன அவதாரம் பற்றிய செய்தி மேருமந்திரபுராணத்திலும் வைணவ புராணத்திலும் இடம்பெற்றுள்ளது. வாமன அவதாரம் கண்ணனின் அவதாரமாக வைணவம் குறிப்பிடுகிறது. மேருமந்திர

புராணம் அருக தேவனின் அவதாரமாகக் குறிப்பிடுகிறது.

திருமால் சமண சமயத்தைப் போதித்தார் எனப் புராணக் கதைகளில் இடம்பெற்றுள்ளது. தேவரது வேண்டுகோளுக்கிணங்க திருமால் தனது உடலிலிருந்து மாயா மோகர் என்பவரை உண்டாக்கி அசுரரை மயக்கி வரும்படி அனுப்பினார். அக்கட்டளைப் படியே சென்ற மாயா மோகர் தம் உடைகளைக் களைந்து தலையை மழித்துக் கையில் மயிற்பீலி பிடித்து அசுரர் வாழ்ந்திருந்த நர்மதை ஆற்றங்கரைக்குச் சென்று அசுரருக்குச் சமண மதத்தைப்; போதித்து அவரை ஆருகரர் ஆக்கினார் எனக் கூறுவதைச் சமண வைணவ இணைப்பிற்கான கூறாகக் கருதமுடிகிறது. இதனையே

“கள்ள வேடத்தைக் கொண்டுபோய் புறம் புக்கவாறும் கலந்த சுரரை
உள்ளம் பேதம் செய்திட்டு உயிருடை உபாயங்களும்
வெள்ளநீர்ச் சடையானும் நின்னிடை வேறலாமை விளங்க நின்றதும்
உள்ளமுள் குடைந்து என்னுயிரை உருக்கி உண்ணுமே”

(திருவாய்மொழி ஐந்தாம் பத்து)

என்று நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் குறிப்பிட்டுள்ளமையை அறியமுடிகிறது.

## முடிவுரை

சமண சமயம் வைணவ சமயத்தில் மேற்கண்ட நிலையில் தன்னைப் பொருத்திக் கொள்கிறது. இலக்கியங்களில் வெளிப்பட்ட சமண சமயத்தின் வைணவ இணைவு என்பது சமூக நிலையிலும் காணக் கூடியதாக அமைந்துள்ளது.

## துணைநூற் பட்டியல்


அறவாணன், க.ப., 1993. - **சமணம் வளர்த்த தமிழ்** இலக்கணம்; சமணாலயம், புதுச்சேரி.

ஆசாரிய ஸ்ரீ குணபத்ர சுவாமி, 2006 - **ஆத்மானு சாஸனம்,** ஆசார்ய ஸ்ரீ வித்யாஸாகர் தர்ம பிரபாவனா சங்கம், சென்னை.

இராசாராம்;, துரை., 2001. - **சீவக சிந்தாமணி,** முல்லை நிலையம், சென்னை.

கொற்றன்காரி, ஊ., 2005. - **சமணம், (அடிப்படைக் கொள்கைகள்)** திருவண்ணாமலை.